<u>**DEPOSITION OF WITNESS**</u>

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.

Calendar)
Preliminary Register) CC.1131/2024
Sessions)

Deposition of witness for ( Prosecution P.W.3
(Defence
(Court

| | | | |
|---|---|---|---|
| Name | இசக்கிராஜா | -- | |
| Father's Name | கனேசன் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 20th day of February 2026.

<u>**முதல் விசாரணை**</u>

நான் தற்போது சிவகாசி தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரதுறையின் உதவு இயக்குநர் நிலை –2, மேற்படி அதே துறையின் அ.சா.1 திரு, அஜித்குமார் உதவி இயக்குநர் 3 திருமதி. R. திபா துணை இயக்குநர் 1 ஆகவும் பணிபுரிந்து வருகிறார்கள். கடந்த 08.08.2024 அன்று முற்பகல் 11 மணிக்கு விருதுநகர் மாவட்டம் சிவகாசி வட்டம் சல்வார்பட்டி கிராமம் Survey எண் 957/1b , 957/2b மற்றும் பல கதவு எண்.1/512 என்ற முகவரியில் இயங்கி வரும் S.R.M. பயர் ஓர்க்ஸ் என்ற பட்டாசு தொழிற்சாலையில் 07.08.2024 அன்று சுமார் பிற்பகல் 03.45 மணியளவில் நிகழ்ந்த தீ விபத்து சம்பந்தமாக மேற்படி 2 அதிகாரிகளுடன் நானும் இணைந்து ஆய்விற்கு சென்றோம். 07.08.2024 அன்று திரு.M.முத்துகிருஷ்ணன், வயது–32, த–பெ– மாரியப்பன். அயன் சல்வார்பட்டி என்ற தொழிலாளி மேற்படி பட்டாச தொழிற்சாலையில் Chemical Mixing and Filling பணியினை முடித்துவிட்டு அதே நாள் பிற்பகல் 03.00 மணியளவில் மீதமுள்ள ரசாயணக் கழிவுகள் மற்றும் தொழிற்சாலையின் பட்டாசு உற்பத்திக்கழிவுகளை எடுத்துக்கொண்டு கழிவுக்குமியில் எறிப்பதற்காக தொழிற்சாலை வளாகத்திலிருந்து சுமார் 1 அரை கீலோமீட்டார் தொலைவில் உள்ள கழிவு குழியில் (சுடுகாடு) எறிப்பதற்காக தொழிறசாலையின் Bolero pickup வண்டியின் மூலம் எடுத்துக்கொண்டு கழிவுக்குமியில் கொட்டியுள்ளார். பின்பு அதை எறிப்பதற்கு திரி வைத்துவிட்டு அவரது நண்பர்களுக்கு தொலைபேசியின் மூலம் அருசில் உள்ள ஆற்றிற்கு குளிக்க வருமாறு அழைத்துள்ளார். அவர் அழைத்ததின் பேரில் அவரது நண்பர்கள் வரவே அவருடன் சேர்ந்து குளித்துவிட்டு வந்து கழிவுக்குழியில் கொட்டப்பட்ட கழிவுகள் முழுவதும் எறிந்துவிட்டதா என பார்பதற்கு அவர் மட்டும சென்றுள்ளார். அதே நேரத்தில் காற்றின் வேகம் அதிகமாக இருந்ததால் குழியில் இருந்த கழிவுகள் தீடீர் என தீப்பிடித்து

எறிந்துள்ளது. அதன் அருகில் நின்று கொண்டிருந்த திரு,M. முத்துகிருஷ்ணன் என்ற தொழிலாளியின் மீது தீ திவலைகள் பட்டதில் தீ காயம் ஏற்பட்டது. அவரது அளரல் சத்தம் கேட்டு அவரது நண்பர்கள் அவரை மீட்டு தொழிற்சாலையின் Bolero pickup வண்டியின் மூலம் சிவகாசி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர். பின்பு நான் சிவசாசி எனது அலுவளகத்திற்கு சென்று விட்டேன். மேற்படி தீ விபத்தின் சம்பந்தமாக அ.சா.1 திரு.அஜித்குமார் சட்டரீதியான நடவடிக்கை மேற்கொண்டார் என்ற விபரத்தினை தெரிவித்துக்கொள்கிறேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை</u>**

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 20th day of February 2026 .

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**